# 12-04-2024 செய்தி

## டிஜிட்டல் சேவைகள் ஏற்றுமதியில் நான்காம் இடத்தில் இந்தியா

- கடந்தாண்டு டிஜிட்டல் சேவைகள் ஏற்றுமதியில், சீனாவை பின்னுக்குத் தள்ளி, இந்தியா முன்னேறியுள்ளது என, உலக வர்த்தகஅமைப்பு தெரிவித்துள்ளது.
- உலக வர்த்தக அமைப்பு உலகளாவிய வர்த்தக கண்ணோட்டம் மற்றும் புள்ளியியல் என்ற தலைப்பில் அதன் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- உலகளவில் டிஜிட்டல் சேவைகள் ஏற்றுமதியில், நான்காவது பெரிய நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது. கடந்தாண்டுக்கான இந்தியாவின் டிஜிட்டல் சேவைகள் ஏற்றுமதி, முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17 சதவீதம் அதிகரித்தது.
- டிஜிட்டல் சேவை ஏற்றுமதி வளர்ச்சி :

  சீனா - 4% ஜெர்மனி -4% இந்தியா-17%

## சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் தமிழ்நாடு முதலிடம்

- கர்ப்பிணிகள் பராமரிப்புடன் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு 3.31 புள்ளிகளைப் பெற்ற இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.
- மருத்துவமனைகளில் மகப்பேறுகள், மகப்பேறுக்கு பிந்தைய கவனிப்பு போன்ற அம்சங்களிலும் தமிழ்நாடு முன்னிலை பெற்று விளங்குகிறது.
- இந்தியாவில் தொழில் வளர்ச்சி முதலான பிரிவுகளில் மாநிலங்களை முன்னேற்றுவதில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஏற்படுத்தி இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.

SURESH'

## இணையவழிக் குற்றங்களில் இந்தியா 10-ஆவது இடம்

- உலகளவில் இணையவழி (சைபர்) குற்றங்கள் அதிகம் நிகழும் நாடுகளில் இந்தியா 10-ஆவது இடத்தில் உள்ளது.
- உலகளவில் இணைவழிக் குற்றங்கள் அதிகம் நடைபெறும் நாடுகளில் ரஷ்யா முதலிடத்தில் உள்ளது.
- இரண்டாவது இடத்தில் உக்ரைனும் அதற்கு அடுத்தடுத்த இடங்களில் சீனா, அமெரிக்கா, நைஜீரியா, ருமேனியா, வடகொரியா ஆகிய நாடுகளும் உள்ளன.
- 8-ஆவது இடத்தில் பிரிட்டனும் 9-ஆவது இடத்தில் பிரேஸிலும் உள்ளது.

**தொழில்நுட்ப ரீதியான குற்றங்கள்**

- மால்வேர், ரேன்சம் வேர் போன்ற வைரஸ் பாதிப்புகளால் மேற்கொள்ளப்படும் குற்றங்கள், தீர்வுகள் திருடப்படுதல், கடன் அட்டை மற்றும் வங்கிக் கணக்குகளிலிருந்து இணைய வழியாக பணம் திருடப்படுதல், கட்டண மோசடி, பணப் பரிவர்த்தனை எண்ம நாணயம் உள்ளிட்ட பல்வேறு வகையான குற்றங்கள் குறித்து பல நாடுகளில் உள்ள நிபுணர்கள் கருத்து தெரிவிக்குமாறு ஆராய்ச்சிக் குழுவினர் கேட்டிருந்தனர்.
- அதனடிப்படையிலேயே இந்தக் குறியீடு உருவாக்கப்பட்டுள்ளது.

**ஒவ்வொரு வகையான குற்றம்**

- உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வகையான குற்றங்கள் நடைபெற்று வருசிறது. புவியியல் ரீதியாக இக்குற்றங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- அந்த வகையில் ரஷியாவிலும் உக்ரைனிலும் தனிநபர் தரவுகள் திருடப்பட்டு மோசடியில் ஈடுபடும் குற்றங்கள் போன்ற தொழில்நட்ப குற்றங்கள் அதிகளவில் நடைபெறுவது தெரிய வந்துள்ளது.

**இந்தியாவில் மோசடி குற்றங்கள் அதிகம்**

- இணைய வழியில் முன்பணம் செலுத்தினால் அதிகப் பரிசுத்தொகை கிடைக்கும் என பொதுமக்களை ஏமாற்றும் மோசடிகளே இந்தியாவில் அதிகம் நடைபெறுகிறது.
- அமெரிக்கா மற்றும் ருமேனியாவில் அதிகதொழில்நுட்பக் குற்றங்கள் மற்றும் குறைவான தொழில்நுட்பக் குற்றங்கள் ஆகிய இரு பிரிவுகளிலும் குற்றங்கள் நடைபெறுகின்றன.

## மாநகராட்சி தேர்தலில் போட்டியிட அரசியல் கட்சிகளுக்கு தடை இல்லை

- உச்ச நீதிமன்றம் வகுத்த சட்டத்தின்படி, மாநகராட்சி தேர்தலில் அரசியல் கட்சிகள் போட்டியிட மாநில தேர்தல் ஆணையம் அளித்துள்ள அங்கீகாரம், அதன் அதிகார வரம்புக்கு உட்பட்டதுதான்.
- அரசியல் சாசன விதிமுறைப்படி, மாநில தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மாநகராட்சி தேர்தலில் போட்டியிட தடை இல்லை.
- மாநகராட்சி தேர்தலில், அரசியல் கட்சிகளுக்கு மாநில தேர்தல் ஆணையம் சின்னங்களை ஒதுக்கீடு செய்வது நியாயமானதுதான், தன்னிச்சையானது அல்ல.
- இந்தியாவில் முதல் பொதுதேர்தல் நடைபெற்றபோது, பெரும்பாலான வாக்காளர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருந்தார்கள்.
- அதனால் தேர்தலில் சின்னங்கள் பயன்படுத்தும் முறை கொண்டுவரப்பட்டது. தேர்தல் சின்ன விதிமுறைப்படிதான், ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில கட்சிகளுக்கு மாநில தேர்தல் ஆணையம் ஒதுக்கீடு செய்யப்பட்ட சின்னங்களை வழங்குகிறது.
- இது அதிகார வரம்பு மீறல் அல்ல.

SURESH'

## கேன்ஸ் திரைப்பட விழா: 'கோல்டன் பாம்' விருதுக்கான போட்டியில் இந்திய திரைப்படம்

- கேன்ஸ் திரைப்பட விழாவின் உச்ச அங்கீகாரமான 'கோல்டன் பாம்' விருதுக்கான போட்டி பிரிவில் கடந்த 40 ஆண்டுகளில் முதல் முறையாக இந்திய இயக்குநர் பாயல் கபாடியாவின் 'ஆல் வி இமேஜின் அஸ் லைட்' என்னும் திரைப்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- 77-ஆவது கேன்ஸ் திரைப்படவிழா வரும் மே 14-ஆம் தேதி முதல் 25-ஆம் தேதிவரை பிரான்ஸ் நாட்டின் கேன்ஸ் நகரில் நடைபெறுகிறது.
- கடைசியாக 1983-இல் பழம்பெரும் இயக்குநர் மிரினால் சென் இயக்கிய 'காரீஜ்' திரைப்படம் கோல்டன் பாம்' விருதுக்கான போட்டிப் பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- சேத்தன் ஆனந்தின் 'நீச்சா நகர்' (1946) மட்டுமே கேன்ஸ் திரைப்பட விழாவில் உச்ச விருதை வென்ற ஒரே இந்திய திரைப்படமாகும்.
- இயக்குநர் கபாடியாவின் 'எ நைட் ஆஃப் நோயிங் நத்திங்' படம் 2021 கேன்ஸ் ஐ விருதை வென்றது குறிப்பிடத்தக்கது.